விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சா்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

சங்கு 23
ஒலி 066 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 11 புதன்கிழமை (23.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### எரிபொருளுக்கு தட்டுப்பாடு

## இன்றும் சுழற்சி முறையில் 4 மணிநேர மின்வெட்டு

(கொழும்பு)

இன்றைய தினமும் சுழற்சி முறையில் நான்கு மணித்தியாலங்களுக்கு அதிக நேரம் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக, அதன் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்றைய தினம் A,B 15

## யாழில் தனித்திருந்த பெண் அடித்துக் கொலை

### தங்க நகைகளும் அபகரிப்பு



(குப்பிழான்)

யாழ்ப்பாணம் இராசாவின்தோட்டம் சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த வயோதிபப் பெண்ணொருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண் 15

## மன்னார் மனித புதைகுழி வழக்கு

### ஊடகங்களுக்கு அனுமதி

(மன்னார்)

மன்னார் சதொச மனிதப் புதைகுழி வழக்கில், பாதிக்கப்பட்டோர் சார்பாக சட்டத்தரணிகள் முன்னிலையாவதற்கும் ஊடகங்கள் சம்பவ இடத்திற்கு சென்று செய்திகளை சேகரிப்பதற்கும் அனுமதி வழங்கி வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள் 15

### ஐ.நாவை இலக்கு வைத்து

# அரசுக்கு எதிராக பொய்ப் பிரசாரம்

### அமைச்சர் சரத் வீரசேகர குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெறவிருக்கும் நிலையில் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குற்றம் சுமத்தியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிரான மனுக்களை

### விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தும் சட்ட மூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை தொடர உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

முன்னதாக, அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் பாராளுமன்றத்தில் முன்வைத்த பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் திருத்தங்களுக்கு எதிராக பல தனிநபர்கள் மற்றும் அமைப்புகளால் தாக்கல் 15

## கொரோனா 31 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 31 பேர் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் 15

## பிச்சையெடுக்கும் நிலையில் நாடு! ராஜபக்ஷக்களே முழுப்பொறுப்பு

### சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாடு பிச்சையெடுக்கம் நிலையில் உள்ளது. இதற்கு ராஜபக்ஷ சகோதரர்களே முழுப்பொறுப்பு என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டினார்.

எரிபொருள் ஏற்றிய கப்பலில் உள்ள எரிபொருளை இறக்குவதற்கு 36 மில்லியன் டொலர் இல்லை என்பதால், வெஸ்ட் கோஸ்ட் மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 300 15

## நாட்டில் மேலும் +1,254 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கோவிட் தொற்று உறுதியான மேலும் 1,254 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கோவிட் தொற்று 15

## வவுனியாவில் விபத்து; பெண் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், 15

### கட்டுவன் மேற்கில்

## கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுவன் மேற்குப் பகுதியில், 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றைய தினம் கசிப்பு மற்றும் கசிப்பு 15

## எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்க

### ஜனாதிபதி கோட்டா உத்தரவு



(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு நேற்று இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும், எரிபொருள் விலையில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத சட்டத்திற்கு எதிராக சுன்னாகத்தில் கையெழுத்து பேரணி

### சிங்களப் பெண்மணியும் கையெழுத்து



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டத்தின் 18 ஆவது நாளான நேற்று முன்தினம் வலி.தெற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி. பிரகாஷ் தலைமையில் மருதனார்மடம், சுன்னாகம் பகுதிகளில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுன்னாகம் பேருந்து தரிப்பிட நிலையத்தின் முன்பாக இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் சிங்களப் பெண்மணியொருவரும் கலந்து கொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி தனது கையெழுத்தினைப் பதிவு செய்தார். (ம-18)

## பிக்குவால் சிறுவன் துஷ்பிரயோகம் விகாரையை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம்

(கொழும்பு)



வட்டவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிக்குவால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவனுக்கு நீதிகோரி கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டம் நேற்று வட்டவல, ஹயிற்றி தோட்டத்திலுள்ள விகாரைக்கு முன்பாக இடம்பெற்றது.

தோட்ட மக்கள், சிறார்கள் என பலர் இப்போராட்டத்தில் பங்கேற்று நீதிக்காக கோஷம் எழுப்பினர். இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வட்டவல, டெம்பல்ஸ்ட் டோவ் தோட்டத்திலுள்ள சிறுவன் ஒருவரை ஹயிற்றி தோட்டத்தில் உள்ள விகாரையின் பிக்கு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தையால் வட்டவல பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு வட்டவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுவன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த சிறுவனுக்கு நீதிகோரியும் ஏனைய சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், பிக்குவுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்தும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

## கிளிநொச்சியில் எரிபொருள் தட்டுப்பாடு அத்தியாவசிய தேவைகளிற்கு மாத்திரமே விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அத்தியாவசிய தேவைகளிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பெற்றோல், டீசல் விநியோகம் இடம்பெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் பெற்றுக்கொள்ள வருகை தந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதுடன் அதிருப்தி வெளியிட்டனர்.

பெற்றோலுக்கு பதிலாக சுப்பர் பெற்றோலை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

இவ்விடயம் தொடர்பில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரிடம் வினவியபோது,

இருப்பில் இருந்த பெற்றோல் தீர்ந்து போயுள்ளது. வருகை தரும் மக்களிற்கு வழங்க முடியவில்லை. இருப்பில் உள்ள சுப்பர் பெற்றோலையே வழங்குகின்றோம். அதுவும் குறைவாகவே உள்ளது.

இருப்பில் உள்ள மிகக்குறைந்த அளவிலான பெற்றோல் மற்றும் டீசலை அத்தியாவசிய தேவையின் நிமித்தம் வருவோருக்கு உறுதிப்படுத்தியபின் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்குவதாக தெரிவித்தார். (ம-100)

## குருநகர் கடற்பகுதியில் அமெரிக்க பிரஜையின் உடைமைகள் திருட்டு

கடல் ஆய்வில் ஈடுபட்டுவரும் அமெரிக்க பிரஜையின் உடைமைகள் சில குருநகர் கடற்பகுதியில் களவாடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க பிரஜை ஒருவர் இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார். அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாணத்திற்கு கொழும்பில் இருந்து கடந்த 19ஆம் திகதி சிறிய படகொன்றில் வந்துள்ளார்.

படகில் யாழ்ப்பாணம் வந்தவர் குருநகர் கடற்பகுதியில் தனது படகினை நிறுத்திவிட்டு, தங்குவதற்காக யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள நட்சத்திர விடுதிக்கு சென்றுள்ளார்.

விடுதியில் தங்கிவிட்டு மறுநாள் படகுக்கு சென்றபோது படகில் இருந்த சுழியோடி கண்ணாடிகள், பாதுகாப்பு அங்கிகள், கடல் ஆய்வு உபகரணங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதனை அவதானித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-33)






## மைத்திரி - விஜயகலா யாழில் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனை, முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பியுமான மைத்திரிபால சிறிசேன, சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள், வடக்குக்கு விஜயம் செய்து பல்வேறான நிகழ்வுகளிலும் பங்கேற்றுள்ளனர்.

இந் நிலையிலேயே, விஜயகலாவின் வீட்டுக்குச் சென்று, நலன் விசாரித்துள்ளார். (ம)


**பதவி வெற்றிடம்**

பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது

- **அலுவலகச் செய்தியாளர்கள்** (இருபாலாரும்) (உள்ளகம், வெளியகம்) தகைமை : உயர்தரம் கற்றிருத்தல்.
- **பக்க வடிவமைப்பாளர்கள்** ( தமிழ் ரைப்பிங், விளம்பர வடிவமைப்பு உட்பட) தகைமை : க.பொ.த ( சாதாரண தரம்)
- **பத்திரிகை விநியோகஸ்தர்கள்** (சாரதி அனுமதிப் பத்திரம், சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் )

யாழ். நகரில் இருந்து 6 Km க்கு உட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல்

தொடர்பு

076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை நடத்துங்கள்

## ஐ.நா.ஆணையாளரிடம் உறவுகள் கோரிக்கை

(கொழும்பு)

**தமது உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் இடையூறுகளுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக போராட்டத்தை மேற்கொண்டு வருவதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுவரை போராடிய 112 பெற்றோர்கள் மன அழுத்தத்தினாலும் நோய்வாய்ப்பட்டதாலும் மரணித்துள்ள நிலையிலும் நீதி கிடைக்க வேண்டும் என எஞ்சியிருப்பவர்கள் தொடர்ந்தும் போராடி வருவ தாக அவர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

ஆகவே இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கக் கோரி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அவர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

உறவுகளைத் தேடி போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் இறப்புக் காரணமாக அவர்களின் உறவுகள் காணாமலாக்கப்பட்டமைக்கான சாட்சிகள், ஆதாரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த துன்பியல் நிலை தொடர்ந்தால் இறுதியில் சாட்சிகள் இன்மையால் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை முடிவிற்குக் கொண்டு வருவது சிங்கள அரசுக்கு சுலபமாகி விடும் என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மிருசுவில் படுகொலையாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை, திருகோணமலையில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தில் இருந்து கரன்னகொட விடுவிக்கப்பட்டமையையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் இரவோடு இரவாக மத அடையாளங்கள் அழிக்கப்பட்டு விகாரைகள் அமைக்கப்படுவது, பூர்வீக நிலங்களை கையகப்படுத்துதல், போராட்டத்திற்கு முன்னிலை வகிப்பவர்கள் விசாரணைகளுக்கு அளிக்கப்படுவது உள்ளிட்டவற்றையும் அதில் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# 200ரூபாவை தாண்டும் அரிசி விலை

(கொழும்பு)

பெரும்போக நெல் அறுவடை குறைந்துள்ளமை மற்றும் செலவு அதிகரிப்பு காரணமாக ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய சுமார் 200 ரூபாவுக்கும் மேல் செலவாகும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன பசளைகள் கிடைக்காததால், அறுவடை குறைந்தமையே உற்பத்தி செலவு பெரியளவில் அதிகரிக்க காரணம் என அவர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தவிர தற்போது தொழிலாளிகளுக்கான நாள் கூலி 2 ஆயிரத்து 300 ரூபாவாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளதால், ஒரு ஏக்கர் வயலில் நெல்லை அறுவடை செய்ய அறுப்பு இயந்திரத்திற்கு 14 ஆயிரம் ரூபாய் வாடகை செலுத்த வேண்டியுள்ளது எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 200 ரூபாவுக்கும் மேல் செலவாகும் என விவசாயிகள் கூறும் நிலையில், இதனைவிட அதிக விலை கொடுத்து நுகர்வோர் அரிசியை கொள்வனவு செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அரிசிகளுக்கான விலைகளை நிர்ணயித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் திரும்ப பெற்றது. இதன் காரணமாக அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தமது விருப்பத்திற்கு அமைய அரிசி விலைகளை நிர்ணயித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கார் விபத்தில் இலங்கையர்கள் பலி

## ருமேனியாவில் துயரம்

(ருமேனியா)

ருமேனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ருமேனியாவின் துல்சியா கவுண்டியில் உள்ள ஹொரியா பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாலையில் வேகமாக பயணித்த கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நடைபாதையில் நடந்து கொண்டிருந்த இரு இலங்கையர்கள் மீது மோதி இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (நி)

### ஏப்ரல் இறுதிக்குள்

# அனைத்து அரச அலுவலர்களும் தடுப்பூசி பெற்றிருத்தல் வேண்டும்

(கொழும்பு)

அனைத்து அரச அலுவலர்களும் ஏப்ரல் மாத இறுதிக்குள் முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதை தடுக்கும் வகையில் இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களும் பொது இடங்கள் என்பதால், அந்த இடங்களில் பணியாற்றும் அனைவரும் த்டுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன வலியுறுத்தியுள்ளார்.

ஏதேனுமொரு கடமைக்காக நிறுவனம் ஒன்றிற்கு செல்லும் எவருக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளார்களா? என்று விசாரிக்க உரிமை உண்டு. அத்தகைய விசாரணையின் போது அந்த அதிகாரி முழுமையாக தடுப்பூசி போடவில்லை என்றால், அது தொடர்பாக பிரதேச பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்தால் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு ஒருவருக்கு உரிமை இருந்தாலும், இன்னொருவரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் உரிமை அவருக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

### உக்ரேய்ன்-ரஷ்யா முறுகல் நிலை

# அதிகரிக்கும் எரிபொருள் விலை

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

உக்ரேய்னுக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான பதற்றங்களின் பின்னணியில் உலக சந்தையில் எரிபொருள் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தற்போதைய விலையில் எரிபொருளை விற்பனை செய்வதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலையை திருத்துவது தொடர்பாக அரசாங்கம் இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும் திருத்தம் விரைவில் மேற்கொள்ளப்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (நி)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான இறுதி அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மற்றும் அது சார்ந்த சாட்சியங்கள் உள்ளடங்கிய சகல அத்தியாயங்களும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த ஆணைக் குழுவினால் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களுடன் கூடிய 88 அத்தியாயங்களைக் கொண்ட முழுமையான அறிக்கை ஜனாதிபதி சட்டத்துறை பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த ரோஹண தீரவினால் நேற்று பாராளுமன்றத்தில் வைத்து சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தனவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக் குழுவினால் கண்டறியப்பட்ட விடயங்கள் மக்களை சென்றடைய வேண்டும் என்பதாலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் மேலதிக ஆய்வுக்காகவும் ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய, குறித்த அறிக்கை பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டுள்ளது. (நி)

# மேலதிக வரிச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அவைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் மேலதிக வரிச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2000 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக வரி அறவிடக் கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக வரியை அறவிட தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25 சதவீத மேலதிக வரி தொடர்பான சட்டமூலத்திற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்கெதிரான இருபது-20 தொடர்

## இலங்கை அணி அறிவிப்பு




இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான இருபது-20 தொடரில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க இலங்கை அணி விபரத்தை இலங்கை கிரிக்கெட் அணி தெரிவுக் குழு அறிவித்துள்ளது.

தசுன் சானக தலைமையிலான 18 பேர் கொண்ட இந்த அணியில், அதிரடி துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷ இடம் பெறவில்லை.


இந்த அணியில், தசுன் சானக, பெத்தும் நிஸங்க, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, தினேஷ் சந்திமால், தனுஷ்க குணதிலக்க, கமில் மிஸ்ரா, ஜனித் லியனகே, வனிந்து ஹசரங்க, சமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, லஹிரு குமார, பினுர பெனார்டோ, ஷிரான் பெனார்டோ, மகேஷ் தீக்ஷன, ஜெப்ரி வெண்டர்ஷே, பிரவீன் ஜெயவிக்ரம, அஷியன் டேனியல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

உபாதைக்குள்ளாகியுள்ள அவிஷ்க பெனார்டோ, நுவான் துசார மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் இத்தொடருக்கு முன்னதாக குணமடையும் பட்சத்தில் இவர்களும் அணியுடன் இணைவர்கள்.

இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதில் முதலாவதாக நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் முதல் போட்டி, நாளை 24ஆம் திகதி லக்னோவ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4-6)

# இந்திய டெஸ்ட் அணியின் புதிய கப்டனாக ரோகித்




இந்திய டெஸ்ட் அணியின் கப்டன் பதவியில் இருந்து விராட் கோலி விலகியுள்ள நிலையில் புதிய கப்டனாக ரோகித் சர்மாவை பிசிசிஐ நியமித்துள்ளது.

தென்னாபிரிக்காவில் கடந்த டிசெம்பர் மாதம் சுற்றுப் பயணம் செய்து விளையாடிய இந்திய அணி டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் இழந்ததையடுத்து விராட் கோலி கப்டன் பதவியில் இருந்து விலகினார்.

இதனையடுத்து அடுத்த மாதம் இலங்கை அணிக்கெதிராக இந்திய அணி டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள நிலையில் ரோகித் சர்மாவை புதிய டெஸ்ட் அணியின் கப்டனாக பிசிசிஐ நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

ரோகித் சர்மா ஒருநாள் மற்றும் இருபது-20 அணியின் கப்டனாக இருந்த நிலை யில் தற்போது 3 வடிவிலான அணியிலும் அவர் கப்டனாக பணியாற்றுவார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2520

### தாட்ஷா

உலக அளவில் ஆண்கள் சமைக்கும் உணவே அதிக சுவையானது. ஸ்பெயின் யூனிவர்சிட்டி அறிக்கை



இந்த விஷயம் கடுகளவு வெளிய தெரிஞ்சாலும் உசுருக்கு ஆபத்து

### வினுஜன்

பிரச்சினை என்றால் என்ன என்று தெரியுமா?



நாங்க எல்லாம் பிரச்சினையோடவே வாழ்ந்திட்டு இருக்கிறவங்க... சந்தோஷமே எங்கள பார்த்து பயந்து ஓடி போச்சு... போவியா....

### கேதீஸ்வரா

மனைவியும் பொலிசும் ஒன்று தான். அவங்க முன்னாடி கொஞ்சம் எளக்காரமா



சிரிச்சுப்பாருங்க...! இரண்டு பேருமே கும்மிருவாங்க...!

### லிஷாஜன்

இந்த பொல்லாத உலகத்திலே ஏன் என்னை படைத்தாய் இறைவா




தெரியாம படைச்சிட்டேன் இந்தா காசு போய் பூச்சி மருந்து வாங்கி குடிச்சிட்டு செத்துடு


### சிவதர்சினி

நாடு முழுவதும் இன்று மின்வெட்டு அமுலாகிறது News




இந்த லட்சணத்துல மின்சார வாகன இறக்குமதி

### தினேஷ்



எல்லா இனத்திலேயும் பொண்டாட்டி இப்படி தான் போல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அதிகாரத்தை பலப்படுத்தும் அரசியல்வாதிகள்- பவ்ரல் சாடல்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பல அமைச்சர்கள் தமது அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத்த முயல்கின்றனர் என்பது அவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அவதானிக்கும் போது தெளிவாகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப் பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்,

தனிநபர்களின் அரசியல் நலன்களுக்காக சில விடயங்களைச் செய்வதைத் தவிர்த்து நாட்டினதும் மக்களதும் நலனுக்காக உழைக்க வேண்டியது அவசியம். (நி)


## சாவகச்சேரி நகராட்சிமன்ற பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

எமது நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான பாவிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள், உபகரணங்கள் 09.03.2022 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நகராட்சி மன்ற முன்றலில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும். இதில் பங்குபற்றுபவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். ஏலத்தில் பொருட்களை பெற்றுக் கொள்பவர்கள் ஏலத்தொகையை உடன் செலுத்துவதுடன் பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

**பொருட்களின் விபரம்**

1.கட்டுமானப் பொருட்கள் (கதவு, நிலை, யன்னல்கள்)
2.உழவு இயந்திர ரயர் வகைகள்
3.வாகன உதிரிப்பாகங்கள் (ஹயஸ் வான் ரயர்கள், சீற்செற்)
4.இலத்திரனியல் பொருட்கள் மற்றும் கணனி உபகரணங்கள்.
5.அலுவலக தளபாடங்கள்.
6.இரும்பிலான பெயர்ப்பலகைகள்.
7.வெற்று தார் தகரங்கள்.
8.பற்றி வகைகள்.

மேலதிக விபரங்களை அலுவலக அறிவித்தல் பலகையில் பார்வையிட முடியும். ஏல விற்பனை தொடர்பாக நகராட்சி மன்றம் எடுக்கும் முடிவே இறுதியானது.

**திருமதி.சிவமங்கை இராமநாதன்,
தவிசாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
23.02.2022**

(சி-3821)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**முருகன் பூபதி**

தோற்றம் 25.10.1945 மறைவு 23.02.2020

ஆண்டு இரண்டு கடந்தாலும் நீங்கள்
எங்களை விட்டுச் செல்லவில்லை அம்மா!
கண்முன்னே வாழ்ந்த வாழ்க்கை
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும்
உயிர் வாழும் அம்மா!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மகிழங்கேணி வீதி,
கச்சாய்,சாவகச்சேரி

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்



## கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி.

**பரமேஸ்வரி கந்தசாமி**

(சங்கரத்தை-வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நிர்வாகசபை
உறுப்பினர் திரு.க.கைலைநாதன் அவர்களின்
அன்புத்தாயார் திருமதி.**பரமேஸ்வரி கந்தசாமி** அவர்கள்
இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம்
அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கின்றோம்.
ஓம் சாந்தி!

(சி-3819)

இல.66,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்
சைவ பரிபாலன சபை.



## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் வருடாந்த பொதுக்கூட்டம் -2022

FWC

**மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தொண்டைமானாறு நிலையத்தில் நடைபெறும்.**

**அங்கத்தவர்கள் பிரேரணைகள் இருப்பின் 09.03.2022 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

(10319)

வெளிக்கள நிலைய அலுவலகம்
133, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஆ.கதிர்காமநாதன்
செயலாளர்.



## முச்சக்கரவண்டி ஒப்பந்தம்

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாண் சாலை வெதுப்பக உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்காக முச்சக்கரவண்டி ஒன்றை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக தொடர்புகளை மேற்கொள்வதற்கு கீழ்க்காணும் தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும். (சி-3818)

தொடர்புகளுக்கு- 077 5739 796/ 021 225 2974


## இராசிபலன்

23.02.2022
மாசி 11, புதன்கிழமை
சப்தமி பிற்பகல் 4.09 மணிவரை

விசாகம் பிற்பகல் 2.01 மணிவரை
சுபநேரம் - 5.00-6.30 மணிவரை
இராகுகாலம் - 12.30-2.00 மணிவரை

சந்திராஷ்டமம்- ரேவதி, அச்சுவினி

வளவன்



**மேஷம்**: மனதில் இனப்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.



**கடகம்**: அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும்.



**துலாம்**: பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.



**மகரம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



**ரிஷபம்**: நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.



**சிம்மம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்கள் அடையும் நாள்.



**விருச்சிகம்**: விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே கைகூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**கும்பம்**: பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



**மிதுனம்**: தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம்.



**கன்னி**: சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.



**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படலாம், இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன இடம்பெறலாம்.



**மீனம்**: உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

உன்னை நேசிப்பது நாயாக இருந்தாலும் அதனை நீ நேசிப்பாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையால் மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள், நிறுவனங்கள், தொழிற் சாலைகள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வட மாகாண ஆலோசனைக் குழுவினால் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், மின் உற்பத்தி நிலையங்களில் திருத்த வேலைகள் இடம் பெறுவதாலும், மின் உற்பத்தியில் பாதிப்பேற்பட்டுள்ளது. இதனால் மின்சாரத்தடை ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு பொது மக்கள், அரச நிறுவனங்கள் , தனியார் துறையினர், தொழிற்சாலைகள் இயன்றளவு அத்தியாவசியம் தவிர்ந்த ஏனைய தேவைகளிற்கான மின்சாரம் வீண் விரயமாகாமல் நிலமையை கருத்தில் கொண்டு சிக்கனமாக பாவிப்பதன் மூலம் மின்சார தடையினை குறைத்துக் கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (4)



குருநகர் பங்கின் ஆழுகைக்குட்பட்ட சிறுத்தீவு தூய லூர்து அன்னை திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலைநடை பெற்றது. யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜோ. ஜெபரெட்ணம் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறுதியில் அன்னையின் திருச்சொருப ஆசீரும் வழங்கப்பட்டது.

(படம்- ஏணஸ்ற்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த அறிவியல் அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் 28 ஆவது வருடாந்த அறிவியல் அமர்வு இன்று, நாளை , நாளை மறுதினம் ஆகிய தினங்களில் யாழ்.பல்கலைக்கழக பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வருட அமர்வு " நெருக்கீடுகளின் போது அறிவியல் வெற்றிக்கான அத்தியாவசிய திறன்களின் வரிசையை வெளிப்படுத்தல் " என்னும் தொனிப் பொருளில் பேராசிரியர். செ. கண்ணதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது. அமர்வின் பிரதம விருந்தினராக ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக்கழக சமுதாய மருத்துவ பேராசிரியர் சாமினி பிரதாபன் கலந்து கொள்ளவுள்ளார்.இந் நிகழ்வுகளில் சிறப்புப் பேருரைகள்,கருப்பொருள் ஆய்வமர்வு மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் அமர்வு போன்ற எட்டு நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளது.

25 ஆம் திகதி மதியம் 11.30 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் இடம் பெறவுள்ளது.

மேலதிக விபர ங்களை WWW.thejsa.org என்னும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் எனவும் இந் நிகழ்விற்கு ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமைகோரப்படாததுமான ஒரு தொகுதி மணல், சவள் என்பன நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல், சவள்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் மணல், சவள்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றையதினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## இந்திய மீனவர்களுக்கான விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்களையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த மூன்று இந்திய இழுவைப் படகுகள் கடற்படையினரினால் மடக்கி பிடிக்கப்பட்ட போது அதில் இருந்த 11 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவ் வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது மீனவர்கள் மன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை. மீனவர்கள் சார்பில் இந்திய துணை தூதரக அதிகாரி ஒருவர் ஆஜராகி இருந்தார்.

கொரொனா தொற்று காரணமாக 11 மீன வர்களிடம் வாக்குமூலம் பெறப்படவில்லை அதை பெறு வதற்கு அனுமதிக்குமாறும் அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீரியல் வள திணைக்களத்தினர் மன்றில் கோரினர். இதை ஏற்ற மன்று அடுத்த மாதம் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் அவர்களிடம் வாக்கு மூலம் பெறவும் கட்டளை பிறப்பித்தது. (4-6-18-33-60-104)

## விளைச்சல் குறைவாக பெற்ற விவசாயிகளின் தகவல் சேகரிப்பு

(தருமபுரம்)

காலபோக நெற்ச் செய்கையில் விளைச்சல் குறை வாகப் பெற்ற விவசாயிகளின் விபரங்கள் திரட்டும் நடவடிக் கைகள் கிளிநொச்சி மாவட்ட த்திலுள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்திலும் கோணாவில் கமக்காரர் அமைப்பை சேர்ந்த விவசாயி களின் விபரங்களும் நேற்று சேகரிக்கப்பட்டன.

விதைத்த நெல் வர்க்கம். பயன்படுத்திய உரம். பெறப்பட்ட விளைச்சல் போன்ற விபரங்கள் பெறப்பட்டன.மாவட்ட கமநல சேவைகள் நிலையம் ஊடாக பெறப்படுகின்ற தகவல்கள் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பெரும் போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தமக்கு அழிவுகள் ஏற்பட்டிருப்பின் அருகிலுள்ள கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாக தமது பதிவினை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-316)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய ' பனைப் பொருண் மியவளம் ' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரைநகர் கலாசார மத்திய நிலையத்திற்கு முன் பாகவுள்ள பனந்தோப்பில் நடைபெறவுள்ளது. (4)




வாக்காளர் தினத்தின் யாழ் மாவட்ட நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை "உங்கள் வாக்கு நாட்டின் எதிர்காலம்" எனும் தொணிப்பொருளில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.காலை யாழ் மாவட்ட செயலகத்தில் துவிச்சக்கர வண்டி பவணியுடன் ஆரம்பித்த வாக்காளர் பதிவின் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வானது கொடிகாமம் சென்று பின்னர் சாவகச்சேரி-சங்கத்தானையில் மாவட்ட செயலர் உள்ளிட்ட அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடை பவணியாக தென்மராட்சி கலாசார மண்டபத்தை வந்தடைந்து மண்டபத்தில் வாக்காளர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

(படங்கள்-சுபேசன், ரவிசாந், சிவசாந்தன், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருட்கள் கடத்திய 10 பேர் முல்லையில் கைது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதியில் தண்ணிமுறிப்பு பகுதியில் இருந்து தொல்பொருட்கள் என சந்தேகிக்கப்படும் பாரிய இரண்டு கற்களை அனுமதியற்ற முறையில் வவுனியாவிற்கு கொண்டு சென்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் இரவு 10 பேர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தண்ணிமுறிப்பு பகுதியில் எதுவித அனுமதியும் அற்ற நிலையில் பாரிய இரண்டு கற்களை கனரக வாகனங்களில் கொண்டு சென்றவேளை இராணுவத்தினரின் வீதிசோதனை நடவடிக்கையின் போது மறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

பாரிய கல்லினை ஏற்றி சென்ற வாகனம் மற்றும் பட்டாவாகனம் மற்றும் சொகுசு வாகனம் என்பன ஒட்டுசுட்டான் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இவர்களிடம் இருந்து ஒரு கைபிடி மண்ணும் மீட்கப்பட்டது புதையல் தோண்டும் நடவடிக்கை என பொலிஸாரால் சந்தேகிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் கைதானவர்களையும் சான்றுபொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-281)

# கச்சதீவு ஒப்பந்தத்தினால் இரு நாட்டு மீனவர்களும் பாதிப்பு

## தமிழக முதல்வரிடம் ஜீவன் தெரிவிப்பு



(கொழும்பு)

கச்சதீவு உடன்படிக்கையின் பின்னரே இலங்கை-இந்திய மீன வர்களின் நட்பில் பாதிப்பு ஏற்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தெரிவித்துள்ளதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதமரின் இணைப்புச் செயலாளரான செந்தில் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கை தமிழர்களின் நலன் விடயங்கள், மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கச்சதீவு உடன்படிக்கை முறையானதாக அமையாததன் காரணமாகவே இரு நாட்டு மீனவர்களின் நட்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தமிழக முதல்வரை சந்தித்த பின்னர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் தெரிவித்ததாக த ஹிந்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முதல்வருடன் கலந்துரையாடியதாகவும் இது குறித்து பரிசீலிப்பதாக தமிழக முதல்வர் கூறியதாகவும் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக இலங்கை தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக இதன்போது குறித்த குழுவினரால் தெரிவிக்கப்பட்டதாக த ஹிந்து செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி II)-2022

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி II) பங்குனி மாதம் 3ம், 4ம் மற்றும் 5 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 6 அமர்வுகளாக நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவேட்டறையில் (Record Room) வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் எடுப்பதற்கும், பட்டமளிப்பு விழாவினை காணொளிப் பதிவு செய்வதற்குமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட புகைப்படப்பிடிப்பாளரிடம் பட்டமளிப்பு அங்கி பெற்றுக்கொள்ளும் தினமன்றே புகைப் படம் மற்றும் காணொளிப் பிரதிகளுக்காக (DVD) பதிவுகளை மேற்கொள்ளுமாறு பட்டதாரி மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். குறித்த புகைப்படம் மற்றும் காணொளிப் பிரதிகளுக்கான (DVD) கட்டண விபரங்களையும், தமக்காக குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.
முகவரி: www.jfn.ac.lk

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 25.02.2022 (வெள்ளிக்கிழமை) | மு. ப. 09.00-மதியம்12.00<br>பி. ப. 02.00-பி.ப. 04.00 | • விஞ்ஞானமாணி (பொது)<br>• விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• பொறியியல் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• பொறியியல் தொழில்நுட்பமாணி (சிறப்பு)<br>• உயிர்முறைமைகள் தொழில்நுட்பமாணி (சிறப்பு) |
| 26.02.2022 (சனிக்கிழமை) | மு. ப. 09.00-மதியம்12.00<br>பி. ப. 02.00-பி.ப. 04.00 | • சிறப்புக் கலைமாணி<br>• கலைமாணி (பொது)<br>• சிறப்புக் கலைமாணி (மொழிபெயர்ப்புக் கற்கைகள்)<br>• கலைமாணி (சிறப்பு)<br>• நுண்கலைமாணி (நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும்) |
| 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை) | மு. ப. 09.00-மதியம்12.00<br>பி. ப. 02.00-பி.ப. 04.00 | • கல்வியில் முதுமாணி<br>• வியாபார நிர்வாகமாணி (சிறப்பு, பொது)<br>• வணிகமாணி (சிறப்பு, பொது) |
| 28.02.2022 (திங்கட்கிழமை) | மு. ப. 09.00-மதியம்12.00<br>பி. ப. 02.00-பி.ப. 04.00 | • கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுகலைமாணி<br>• முதுவிஞ்ஞானமாணி<br>• முது வியாபார நிர்வாகமாணி<br>• வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி<br>• தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• மருந்தகவியல்மாணி (சிறப்பு)<br>• சட்டமாணி<br>• சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி<br>• நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்<br>• முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் |

குறிப்பு:
1) பட்டதாரி மாணவர்கள் கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையினால் வழங்கப்படும் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.
2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பட்டதாரிகள் தங்களது பட்ட அங்கிகளை 28.02.2022 தொடக்கம் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல:024-222-3317)
மின்னஞ்சல் முகவரி : drexam@vau.jfn.ac.lk

பதிவாளர் (C-3820)




தமிழ்ச் சைவப் பேரவையின் வழிகாட்டலுடன் சைவ மகா சபை, சைவநெறிக் கூடம் ஆகிய அமைப்புக்களால் செயற்படுத்தப்படும் சிவ வாரத்தினை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நீராவியடியில் அமைந்துள்ள சைவபரிபாலனசபை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மருத்துவ முகாமும் இரத்ததான முகாமும்

(குப்பிழான்)

பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களத் தின் ஏற்பாட்டில் 'மாபெரும் சுதேச ஆயுர்வேத மருத்துவ முகாமும் இரத்ததான முகா மும் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற் பகல் ஒரு மணி வரை காரை நகர் பிரதேச செயலக கலா சார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகா மில் பொதுமக்களும் இணை ந்து பயன்பெற முடியும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். அத்துடன் இரத்ததான முகாம் நிகழ்வி லும் ஆர்வலர்கள் அனைவ ரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் மேலும் கேட்டுள்ளனர். (4-6-18)

# மாவை-சமாசங்களின் பிரதிநிதிகள் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொ ழிலாளர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசங்களின் சம் மேளன பிரதிநிதிகள் நேற்று இலங்கை தமிழரசுக் கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராசாவை சந்தித்து கலந்துரையாடினர்.

மாவிட்டபுரத்தில் அமைந் துள்ள மாவை சேனாதி ராசாவின் இல்லத்தில் இந்த கலந்துரையாடல் நடை பெற்றது. (4-33-104)



யாழ். பாதுகாப்பு படைத் தலை மையகம் மற்றும் 51 ஆவது பாதுகாப்பு படைத்தலை மையகத்தின் நெறிப்படுத்தலின் கீழ், பின்தங்கிய பாடசாலை களில் கல்வி கற்று வரும் மாணவ, மாணவிகளுக்கான காலணிகள், கை உறைகள், சுகாதாரப் பாதுகாப்பு பொருட் கள் என்பவற்றினை கையளிக் கும் நிகழ்வு நேற்று கோப்பாயில் அமைந்துள்ள 51 ஆவது பாதுகாப்பு படைப்பிரிவின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. 51 ஆவது பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த பாடசாலை மாணவர்களுக்கான 250 காலணி சோடிகள், 10,000 கை உறைகள், 250 சுகாதார பாதுகாப்பு பொருட்கள் என்பவற்றை வழங்கி வைத்தார்.

அன்சன் லங்கா தனியார் நிறுவனம் இதற்கான முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது. (படம்:-கஜிந்தன்)



அகில இலங்கை சைவமகா சபை, சைவ பரிபாலன சபை, சைவநெறிக் கூடம், தமிழ் சைவப் பேரவை ஆகியன இணைந்து முன்னெடுக்கும் சிவ வாரத்தின் ஆரம்ப நாள் நேற்று வைபவ ரீதியாக மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் அகில இலங்கை சைவ மகா சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்:-கஜிந்தன்)

# புர்கினா பாசோவில் வெடி விபத்து 59 பேர் பலி, சுமார் 100 பேர் காயம்



(புர்கினாபாசோ)

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினாபாசோவில் உள்ள தங்கச்சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 59 பேர் உயி ரிழந்துள்ளனர். மற்றும் 100 இற் கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஜிபோம்ப்லோரா கிராமத் தில் நேற்று முன்தினம் திங் கட்கிழமை 2 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக பிராந்திய அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரை ந்து சென்ற மீட்புப் படை யினர், காயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அந்த இடத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தங்கத்தை சுத்திகரிப்பதற்காக பயன்படு த்தப்பட்ட இரசாயனங்களால் வெடிப்பு ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. (நி)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி ஜெயபுரம் பகு தியில் ஜெயபுரம் பொலிஸா ருக்கு கிடைக்கப்பெற்ற தகவ லின் அடிப்படையில் கடந்த 22 ஆம் திகதி மறைத்து வைக்க ப்பட்டிருந்த நிலையில் உள் ளூர் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். (4-6-316)

# துன்னாலையில் ஹெரோயினுடன் சிறுமி உட்பட இருவர் கைது

(கரணவாய்)

துன்னாலை குடவத்தைப் பகுதியில் 3.2 கிராம் ஹெரோ யின் போதைப் பொருளுடன் சிறுமி உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் மேற்படி பகுதியில் போதைப் பொருள் விற்பனை இடம்பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து அப் பகுதியை இராணுவம் மற்றும் நெல்லியடி பொலிஸார் இணை ந்து சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட னர்.

இதன்போது வீட்டில் இரு ந்து 3.2 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 45 வயதுடைய பெண்ணொரு வரும், 13 வயது சிறுமி ஒரு வரும் கைது செய்யப்பட்டுள் ளனர். (4-6-60)

# உக்ரேய்னில் உள்ள இரு மாகாணங்களை தனி நகரங்களாக அங்கீகரித்தார் புடின்

(மொஸ்கோ)



கிழக்கு உக்ரேய்னில் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள மாகாணங்களை தனி நகரங்களாக ரஷ்ய ஜனாதி பதி விளாடிமிர் புடின் அங்கீ கரித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரேய்ன் இடையிலான மோதல் விவ காரம் ஐரோப்பிய நாடுகளில் பதற்றத்தை அதிகரித்துள்ள நிலையில், புடினின் இந்த அறிவிப்பு அமைதிப் பேச்சு வார்த்தையை சீர்குலைத்து ள்ளதாக உலகத் தலைவர் கள் வருத்தம் தெரிவித்துள்ள னர்.

கிளர்ச்சியாளர்கள் கட்டுப் பாட்டில் உள்ள உக்ரேய்னின் டுனெட்ஸ், லுகன்ஸ் பகுதி களை தனி நகரங்களாக அங்கீகரிக்க வேண்டுமென ரஷ்ய ஆதரவு தலைவர் கள் வேண்டுகோள் விடுத்த ற்கு அமைய இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா விளக்கம் அளித்துள் ளது.

இதனிடையே இந்த அறி விப்பால், பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், இந்த பகுதிகளுக்கு பொருளாதார தடைகளை விதித்தார். புதிய முதலீடு, வர்த்தகம் ஆகிய வற்றுக்கு தடை விதிக்கும் நிர்வாக உத்தரவில் பிடன் கையெழுத்திட்டுள்ளார். (நி)

# பலாப்பழம் 160 யூரோ...

(லண்டன்)




லண்டனில் உள்ள மிகப் பெரிய மற்றும் பழைமை யான உணவுச் சந்தைக ளில் ஒன்றான போரோ சந்தையில் ஒரு பலாப்பழம் 160 யூரோவுக்கு விற்பனை யாகிறது.

இவ்வளவு அதிகமான விலை, டுவிட்டர் பயனர் களை அதிர்ச்சிக்கு உள்ளாக் கியது.

பலரும் பலாப் பழங்களை விற்று லட்சாதிபதியாக பிரிட்ட னுக்குப் பறந்து செல்வார் கள் என்று பலர் டுவிட் செய்தனர். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு திருவிழா

# இரு நாடுகளில் இருந்தும் தலா 50 பக்தர்களுக்கே அனுமதி

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திருவிழாவில் தமிழக பக்தர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டதன் காரணமாக வெளிவிவகார அமைச்சானது தனது சிபாரிசினைப் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியதன் பிரகாரம் தற்போது பாதுகாப்பு அமைச்சினால் இலங்கையிலிருந்து 50 பக்தர்களும் தமிழ்நாட்டிலிருந்து



50 பக்தர்கள் மாத்திரம் இம்முறை உற்சவத்தில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் இறுக்கமான சுகாதார அமைச்சினால் விதிக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு அமைய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இம்முறை உற்சவம் சிறப்பாக இடம் பெறவுள்ளது.

எனினும், இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவ கட்டுப்பாடுகள் குறித்து மிக விரைவில் அறிவிக்கவுள்ளோம். இதற்குரிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அத்துடன் குறித்த உற்சவத்தில் பங்கு கொள்பவர்களைத் தீர்மானிக்கும் பொறுப்பு யாழ்.ஆயர் தலைமையிலான பங்குத் தந்தைகளிடம் விடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6-18-33-104)

## வவுனிக்குளத்தின் கீழான வீதிகள், வாய்க்கால்களை புனரமைக்கவும்

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் நீர்ப்பாசன வீதிகள், நீர் விநியோக வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைத்து தருமாறு இக்குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் கடந்த 2009 ஆம் ஆண்டின் மக்கள் மீள்குடியமர்வையடுத்து 600 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டதுடன் பிரதான நீர் விநியோக வாய்க்கால்கள் என்பனவும் புனரமைக்கப்பட்டன.

இவ்வாறு குளம் புனரமைக்கப்பட்டமையால் இக்குளத்தின் கீழான ஆறாயிரம் ஏக்கர் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனிக்குளத்தின் கீழான இடது கரை, வலது கரை மற்றும் மத்திய துருசு வாய்க்கால்களின் கீழ் உள்ள இணை வாய்க்கால்கள், நீர்ப்பாசன வீதிகள் இவற்றை விட கிளை வாய்க்கால்கள் என்பனவும் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

இவற்றை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)



இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு தேசிய சமாதான பேரவையின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் மன்னார் மாவட்ட தொடர்பாடலுக்கான மையத்தின் (CCT) இணைப்பாளர் ஜோண்சன் தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (படம் : ஜோசப்நயன்)

## சாதனைப் பெண் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் ஆளுமைமிக்க மகளிர் சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் சிறந்தமகளிர் செயற்பாட்டாளர்களை இனங்கண்டு சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது, சிறந்த பெண் சமூக சேவையாளர் விருது, சிறந்த பெண் கலை இலக்கியம் சார் விருது, சிறந்த பெண் கல்வியாளர் விருது மற்றும் சிறந்த பெண் விளையாட்டு வீராங்கனை விருது என்பன வழங்கி கௌரவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபை எல்லைக்குள் வதியும் தகுதியானவர்கள் இதற்கான விண்ணப்பபடிவத்தை சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்று 01.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், நல்லூர் பிரதேசசபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு நேரிலோ அன்றி பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் அறிவித்துள்ளார். (4)

## யாழ்.ஆரியகுளத்தில் விபத்து இருவர் படுகாயம்

(அராலி)

யாழ். ஆரியகுளம் சந்தி பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிள் - ஆட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.


குறித்த விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு கைப்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ள நிலையில் ஆட்டோவை செலுத்திச் சென்ற நபருக்கு தலை பகுதியில் காயமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலதிக விசாரணையை யாழ். பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-104)

# அரச காணியில் இடம்பெற்றுவரும் கட்டடப்பணியை நிறுத்தக்கோரிக்கை

## மகஜரும் கையளிப்பு

(மன்னார்)



மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மாந்தை கிராமத்தில் அரச காணியில் தனியார் நிதியில் அமைக்கப்பட்டு வரும் கட்டிடத்தின் அபிவிருத்தி பணியை இடை நிறுத்தக்கோரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாந்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிராம மக்கள் ஒன்றிணைந்து மன்னார் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மாந்தை கிராமத்தில் அரச காணியில் தனியார் நிதியில் தற்போது கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட நிலத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் பொது பேருந்து தரிப்பிடம் ஒன் றும் இருந்து வந்துள்ளது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த பேருந்து நிலையம் முற்றாக சேதமாகிய நிலையில், தற்போது அதன் அருகில் ஒரு பேருந்து நிலை யங்கள் அமைக்கப்பட்டு உள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் சில தரப்பினரால் குறிப்பிட்ட காணியில் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது. குறித்த கட்டிடம் தொடர்பாக நாங்கள் சிலரிடம் வினவிய போது பேருந்து நிலையம் ஒன்று அமைப்பதாகவும் எங்களிடம் தெரிவித்தனர். ஆனால் குறித்த பகுதியில் பேருந்து நிலையம் அமைப்பது தேவை அற்றது என கிராம மக்களாகிய நாங்கள் கருதுகிறோம்.

எமது கிராமத்தில் மக்கள் பொது தேவைக்கு என குறிப்பாக முன்பள்ளி, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், சுகாதார நிலையம் ஆகியவற்றிற்கு காணிகள் எவையும் இன்றி தவிக்கும் நிலையில் அரச காணிகளை சில தனிநபர்களுக்கு வழங்குவது தொடர்பாக நாங்கள் கண்டிக்கிறோம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உண்மையான நண்பன் சீனா

## கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச



(கொழும்பு)
சீனா இலங்கையின் உண்மையான நண்பன் என்றே தான் கருதுவதாக கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அவர், இலங்கைக்கு உதவி களை வழங்குவதற்கு சீனா எந்த அரசியல் நிபந்தனையையும் முன்வைத்ததில்லை .

மேலும் சீனா மற்றும் இலங்கைக்கு வரலாற்று ரீதியாக கலாசார தொடர்புகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய விமல் வீரவன்ச யுத்த காலத்தில் அவர்களின் உதவி இல்லையெனில் சர்வதேசத் தடைகளை இலங்கை எதிர் கொண்டிருக்கும் என்றும் தெரிவித்தார். (நி)




உலக தாய்மொழி தினத்தன்று சீனாவில் உள்ள யுனான் மீஞ்சூப் பல்கலைக்கழக மாணவிகள் தமிழ் மொழிக்கு வாழ்த்து தெரிவித்து புகைப்படம் வெளியிட்டுள்ளனர்.

# தினம் ஒரு சுயமுன்னேற்ற சிந்தனைத் தேன்

## தன்னம்பிக்கை கொள்வோம்!



"வெற்றிக்குத் தேவையான முதல் தகுதி தன்னம்பிக்கை நெஞ்சில் பொங்கி வழிய வேண்டும்.தடைகள், அவமதிப்பு நீக்கத் தேவை அதுவே."

டாக்டர் ஜான்ஸன்

முதல் ஆங்கில அகராதியைத் தொகுத்த சாமுவேல் ஜான்ஸனின் பொன்னான சிந்தனை- நலமான உன்வாழ்வுக்கு வளம் சேர்க்கும். பதினேழுமுறை தோல்விகளும் கஜினிமுகமதின் தன்னம்பிக்கையை அழிக்கவில்லையே.நான்காவது முறைதானே பாபர் பானிபட் போரில் வென்றார்?

சுபாஷ் சந்திரபோஸ் வங்கம் தந்த தங்கம். மாவீரன்,பிரிட்டிஸ் சாம்ராஜ் யத்தையே எரித்தவன், துணிவால்- நம்பிக்கையால் கடல் கடந்து- நாட்டுக்காக படைதிரட்டிப் போரிட்டவன். நல்ல ஞானமும் அறிவும் மிக்க சீனத்து ஞானி கன்ஃபூஷியஸ்.இந்த மூன்று பேரின் முத்தான -சத்தான சொற்களை -சொத்தாக மனதில் சேர்த்து வை.

புயலுக்கு சாயாத மலையாகட்டும் உன் மனம்.துயருக்கு கலங்காத கடலாகட்டும் உன் உள்ளம். எவ்வளவு துயரையும் தாங்கும் நிலமாகட்டும் உன் உடல்.

இனி என்ன தயக்கம் இருப்பின் அதனை படுக்கையுடன் சுருட்டிவை, எழு, சிறகை விரி,பற மேலே, இன்னும் மேலே.

உன்னால் முடியாதன உலகில் இல்லை.இல்லவே இல்லை.

நீ சாதிக்கப்பிறந்தவன். எதையாவது ஒன்றை சாதித்து சரித்திரம் உன் பெயரையும் பேசிட வாழ்ந்து போ.இந்த வாழ் நாள் குறைவு ,உனக்கு வாழ்க்கை கிடைத்திருப்பது நீ செய்த அதிர்ஷ்டம், புள் - பூண்டாய்... புழுவாய்-பூச்சியாய் பிறக்காது மானிடனாய் பிறந்ததே நீ செய்த பாக்கியம்.

உன் வெற்றிக்கு என்ன அடிப்படை? அறிவா? ஆற்றலா? எல்லாம் தான். எல்லாவற்றிற்கும் மேலே -

உன்னை உயர்த்துவது உன் தன்னம்பிக்கையே. உன்மீதே உனக்கு நம்பிக்கை அற்றுப் போனால், அப்புறம் உலகில் உனக்கு யார் இருக்கின்றார்கள்?

யாரால் உன்னை உயர்த்த முடியும்? நீ உன்னை நம்பு. அந்த நம்பிக்கை உனக்கு ஆயிரம் யானைகளின் பலம் தரும்.

நம்மால் எங்கே முடியப்போகிறது? என நீ நினைத்து நீ உன்னைத் தாழ்த்தினால், இந்த உலகமும் உன்னைத் தாழ்த்தும், கீழே அழுத்தும்.

முடியும் என தலைநிமிர்ந்து நில், உலகம் உனக்கு அடிபணியும் வாழ்த்தும் வழிகாட்டும் எல்லாம் உன்னிடம் - உன் உள்ளத்தில் புதைந்தே கிடக்கின்றது.

கடவுள் எல்லா ஆற்றலையும் நமக்குக் கொடுத்தே இருக்கிறார். யாராலும் சாதிக்கமுடியும். சாதிக்க முடிந்தவர்கள் எல்லாம் கொம்பு முளைத்தவர்கள் அல்ல. தேவ லோக வாசிகளும் அல்ல.எல்லாம் நம்மைப்போன்ற மனிதர்கள். ஏழ்மையில் இருந்த எடிஸன் எப்படி இத்தனை சாதித்தார்? படிக்காத- படிக்க முடியாத அந்த பாமரன் எத்தனை எத்தனை அறிவியல் சாதனங்களைக் கண்டார்.அதன் மூலம் அளவற்ற செல்வமும் புகழும் கண்டார்.

எல்லாம் தன்னம்பிக்கையே! நெப்போலியனின் எல்லா வெற்றிற்கும் அவன் நம்பிக்கை தான் அடிப்படை.

பாபர் தன்னம்பிக்கையை இழந்திருந்தால்...காழல் நகரத்தில் செத்து மடிந்திருப்பார்.

அந்த நம்பிக்கை துணிவைத்தர நான்காவது முறை நல்ல வாய்ப்பாக மாறி 1526 பானிபட் யுத்தம் பாதை போட்டது. மொகலாய சாம்ராஜ்யம் உருவானது.எதையும் யோசிக்காது நிராகரித்து , உன்னைத் தாழ்த்தி... நீயே தோல்விகளை வரவழைத்து விடாதே சொல்லப்படுகின்ற இந்தக் கருத்தையெல்லாம் வெறும் ஆறுதல் அல்ல; அழுகை நிறுத்தும் தேறுதல் அல்ல.

அனுபவச் சிந்தனைகள்,வரலாற்று உண்மைகள், சாதித்தவர்களின் சரித்திரச் சான்றுகள்.

இவையெல்லாம் உனக்காக.

என்னிடம் ஒன்றுமில்லையே என நினைக்காதே.

இப்படிப்பட்ட உயர் சிந்தனைகள் உ[illegible]
இ[illegible] முடியும், நிச்சயம்! (முற்றும்)

# போலி பி.சி. ஆர் பரிசோதனை அறிக்கை தயாரித்த மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போது விமான நிலைய அதிகாரிகளுக்கு காண்பிப்பதற்காக போலி பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகளை தயாரித்த குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் இரவு இந்த கைது சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மூவரும், நாட்டிலுள்ள முன்னணி மருத்துவமனையின் பி.சி.ஆர். பரி சோதனை அறிக்கைகளில் உள்ள விரைவான பதில் குறியீட்டை (QR Code) பயன்படுத்தி மிகவும் சூட்சுமமான முறையில் அதிகளவு போலியான பி.சி.ஆர். அறிக்கைகளை தயாரித்துள்ளனர் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர்.

சந்தேக நபர்கள் சில காலமாக இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும், பி.சி.ஆர். அறிக்கையொன்றுக்கு 6000 ரூபா அறிவிட்டுள்ளதாகவும், இவர்கள் மூவரும் நீர்கொழும்பு தர்கா நகரைச் சேர்ந்த வர்கள் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரினர் தெரிவித்துள்ளனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 420 | 400 | 450 | 500 |
| தக்காளி | 230 | 240 | 180 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 120 | 130 | 160 | 140 |
| கரட் | 350 | 450 | 450 | 500 |
| பூசணி | 120 | 150 | 140 | 180 |
| புடோல் | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 150 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 120 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 300 | 320 |
| வெண்டிக்காய் | 180 | 200 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 200 |
| பீற்றூட் | 100 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | 400 | 450 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 150 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 230 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 80 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 70 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 120 | 70 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன டயர்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை

## டயர் இறக்குமதியாளர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் வாகன டயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது. அமெரிக்க டொலர் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது என டயர் இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

சில வர்த்தகர்கள் டயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக போலியான தட்டுப்பாட்டை தற்போதே உருவாக்கி வருவதாக ஆசிய டயர் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் இலங்கைக்கு சுமார் 31 இலட்சம் டயர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இதில் பதினெட்டரை இலட்சம் டயர்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

எஞ்சிய சுமார் 41 வீதமான டயர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அமெரிக்க டொலர் தட்டுப்பாட்டினால் வாகனங்களுக்கான டயர்களை இறக்குமதி செய்து கொள்வதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)


# இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தமிழ் மொழியை கற்பதில் ஆர்வம்

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிச்சுங் இலங்கை மொழிகளை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றார்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளை அவர் கற்றுக் கொள்ளும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்கத் தூதரக உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இந்தப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (நி)



# சீமெந்து உற்பத்தியை முழுமையாக நாட்டில் மேற்கொள்ள தீர்மானம்

(கொழும்பு)

கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் நிர்மாணத் துறையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, சீமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்காலத்தில் நாட்டுக்குள்ளேயே முழுமையான சீமெந்து உற்பத்தியை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் எவையும் சந்தையில் காணப்படவில்லை எனவும் மருந்துப் பொருட்கள் தவிர்ந்த பல பொருட்களுக்கான நிர்ணய விலையை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தைக் கொண்டு தேவையற்ற பயன்களை அடைய முயற்சிக்க வேண்டாமென்றும் வர்த்தகர்களிடம் நிதியமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# ஒற்றையாட்சியில் ஒரே சட்டம் என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

இலங்கை போன்ற ஒற்றையாட்சி நாட்டிற்கு அனைவருக்கும் ஒரே சட்டம் என்ற கட்டமைப்பு பொருந்தும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சட்டங்கள் இருக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு இருப்பின் இனங்கள் மற்ற சமூகங்களிடையே கருத்து வேறுபாடு, விரக்தி மற்றும் பகைமையை உருவாக்கும்.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (நி)



# இன்று ஒரு தகவல்

## ஆவலைக் குறைப்போம்

அது நடந்ததா? இது ஆயிற்றா? எப்போது வரும்? என்ன ஆகும்? என்று பார்ப்போம்.

இப்படி ஆயிரமாயிரம் கேள்விகளை எழுப்பிக் கொண்டு மனத்தை அலைக்கழித்துக் கொள்வதோடு, செய்யும் வேலைகளையும் அரைகுறையாக ஆக்கிக் கொள்பவர்கள் பலர் ஏன், கொஞ்ச நேரம், கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளலாகாதா?

இப்படிப் பதற்றத்துடன் ஆர்வம் தாங்காமல் துடிப்பவர்கள் நாளடைவில் எந்த ஒரு செயலிலுமே பொறுமை காட்ட இயலாதவர்களாய்த் தவிர்த்து, நிதானத்தை இழந்து, ஒன்றிலும் உருப்படியாகக் கவனம் செலுத்த இயலாதவர்களாக ஆகித் துடிப்பார்கள்.

நீங்கள் எதிர்நோக்கிய கடிதம் ஒன்று வருகிறது. அதை எத்தனை மணி நேரம் உங்களால் பிரிக்காமல் வைத்துக் கொள்ள முடியும்?

உங்களுக்குப் பிடித்த படம் ஒன்று வெளியாகியிருக்கிறது. எத்தனை நாள் உங்களால் அதைப் பார்க்காமல் இருக்க முடியும்?

நீங்கள் விரும்பிய பொருள் ஒன்றை வாங்கப் பணம் வந்துவிட்டது. எவ்வளவு காலம் உங்களால் அந்தப் பொருளை வாங்காமல் காலந்தள்ள முடியும்?

முடியாது, முடியாது, முடியாது என்பது தான் உங்கள் பதிலானால் அது நன்மைக்கு அறிகுறியல்ல.

அதே நேரத்தில் கடிதத்தைப் பிரித்தவுடன், படம் பார்த்தவுடன் , அந்தப் பொருளை வாங்கியவுடன் மனம் எதிர்பார்த்த அளவு திருப்தி அடைகிறதா என்றால் அதுவும் இராது.

காரணம் என்ன? ஆர்வத்தின் காரணமாகப் பலனை மானசீகமாக அனுபவித்து விடுகிறோம். எனவே எதிர் பார்த்தபடி நடந்தாலும் மனம் திருப்தி அடையாமல் போகிறது.

மிகுந்த ஆர்வத்தின் முடிவு, மிகுந்த சலிப்புதான். ஒருவேளை இவற்றில் தடங்கல் ஏதும் ஏற்பட்டால் அதை மேற்கூறிய தன்மையுடைய நபர்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

மானசீகமாக நன் மையே அனுபவித்து விட்டதால் நடைமுறையில் அவர்களால் அதற்கு நேர் எதிரான பலனை சந்தி க்க முடிவதில்லை. வெறுப்பும் வேதனையும் பன் மடங்காகின்றன. விளைவு?

அது வேறு திசையில் திரும்பி மேலும் பல நட்டங்களைத் தோற்றுவித்துவிடும். வம்பான சமாசாரங்களை வலியப் போய் வரவேற்பானேன்?

இத்தகைய பலவீனம் இருக்கிறதா என ஒரு வினாவை எழுப்பி உண்மையை எடுத்து உணர ஆரம்பித்தால், அதுவே முதற்படியில் காலை வைத்து விட்டதாக அர்த்தம்.

அடுத்து, கைக்கெட்டும் தூரத்தில் இருந்தாலும், வாய்க் கெட்டும் தூரத்தில் இருந்தாலும் அதை அடை வதில் காட்டும் ஆர்வத்தை வேகத்தைக் குறைக்கும் வகையில் நேரத்தைக் கடத்துங்கள்.

நம்மாலும் எந்த விடயத்தையும் பொறுமையுடன் கையாள முடியும் என்ற தன்னம்பிக்கையைப் பெற மெல்ல முயலுங்கள். உங்களால் முடியும். அந்த உணர்வு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதோடு நடைமுறை வாழ்வில் மிகுந்த பலனையும் தரும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கிக்போ கிக்பாவும் உதவி செய்யும் தேவதைகளும்

அதற்குப் பின் இரண்டாவது முறையாக தேவதைகளின் நாள் வந்தது. அப்போதும் யார் சொல்வதையும் கேட்காமல் நிலத்தில் கிழங்குகளை விதைக்கப் போவதாகச் சொல்லிச் சென்றான்.

நிலத்துக்குப் போய் கிழங்குகளை விதைக்க ஆரம்பித்ததும் தேவதைகளின் குரல் ஒலித்தது.

"நீ யார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"என் பெயர் கிக்போ கிக்பா. என்னுடைய நிலத்தில் கிழங்குகளை விதைத்துக் கொண்டிருக்கிறேன்" தேவதைகள், "நாங்கள் உனக்கு உதவுகிறோம்" என்று சொன்ன அடுத்த சில நொடிகளில் நிலத்தில் கிழங்கு முழுவதுமாக விதைக்கப்பட்டு விட்டது. வேலையை சீக்கிரத்தில் முடித்துக் கொண்ட அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். மூன்றாவது முறையாக தேவதைகளின் நாள் வந்தது. வழக்கம் போல அவனை போகக் கூடாது என்று தடுத்தார்கள். அதை மதிக்காத கிக்போ கிக்பா நிலத்துக்கு வந்து கிழங்குகளை அறுவடை செய்ய ஆரம்பித்தான். ஒரு கிழங்கைப் பிடுங்கியதும் முன்பு கேட்ட அதே தேவதைகளின் குரல் கேட்டது.



நீ யார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

என் பெயர் கிக்போ கிக்பா, என்னுடைய கிழங்குகளை அறுவடை செய்கிறேன். நாங்கள் உனக்கு உதவுகிறோம் என தேவதைகள் பதில் அளித்ததும் மின்னல் வேகத்தில் கிழங்குகள் பிடுங்கப்பட்டு ஓர் இடத்தில் குவிக்கப்பட்டு விட்டன. அப்போது பிடுங்கப்பட்ட கிழங்குகளைப் பார்த்த கிக்போ கிக்பாவுக்கு கிழங்குகள் என்னும் நன்றாக விளையவில்லை என்று தெரிந்தது.

சிறந்த விவசாயியான அவன் தானாகவே பிடுங்கியிருந்தால் கிழங்குகளின் விளைச்சலைப் பார்த்து விட்டு அறுவடையை இப்போது செய்யலாமா? அல்லது சில நாட்களுக்குப் பிறகு செய்யலாமா? என்று முடிவு செய்திருப்பான். தேவதைகள் அவசரமாக எல்லா கிழங்குகளையும் பிடுங்கிப் போட்டு நாசம் செய்து விட்டன.

கிக்போ கிக்பா கிழங்குகளின் முன்னால் உட்கார்ந்து அழுதான். சோகத்துடன் இரண்டு கைகளாலும் தன் தலையில் அடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான். அப்போது மறுபடியும் தேவதைகள் அதே கேள்வியைக் கேட்டன.

நீ யார்? இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

என் பெயர் கிக்போ கிக்பா. நான் சோகமாக தலையில் அடித்துக் கொள்கிறேன் என்று அவன் பதில் சொல்ல, தேவதைகளும் நாங்கள் உனக்கு உதவி செய்கிறோம் என்றன. உடனே ஏராளமான கைகள் தோன்றி அவன் தலையில் ஓங்கி அடிக்கத் தொடங்கி விட்டன.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்

22



ஞானப் பார்வையால் நடப்பது என்ன? என்பதைத் தெரிந்து கொண்டு வேகமாய் வீடு திரும்பினார்.

குடிசைக்குள் ஏற்பட்ட சலசலப்பும், முனிவர் வேகமாகச் சென்ற பரபரப்பும் இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டன.

கலவியில் மயங்கிக் கிடந்த காரிகை விடுதல் அறியா விருப்பில் அகப்பட்டுக் கொண்டாள். அவள் ஏமாந்து விட்டாள் என்று கூற முடியாது. தூண்டிலில் அகப்பட்ட மீன் ஆகிவிட்டாள்.

முனிவர் விழிகள் அழலைப் பொழிந்தன. "கல்லாகுக" என்று சொல்லாடினார்; அவனையும் எரித்து இருக்கலாம்; இந்திரன், தேவர்களின் தலைவன்; அவனைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. "நீ பெண் ஆகுக" என்று சபித்தார். "மற்றவர் கண்களுக்கு நீ உன் சொந்த உருவில் காட்சி அளிப்பாய்; உனக்கு மட்டும் நீ பெண்ணாகத்தான் தோன்றுவாய்" என்று சாபம் இட்டார். இருட்டிலே நடந்தது வெளிச்சத்துக்கு வரவே இல்லை. உலகத்துக்கு அவள் ஒரு பாடமாக விளங்கினாள்.

கல்லாகி விட்டவளுக்குப் பாவ விமோசனமே கிடையாதா? ஆண்கள் தவறு செய்தால் மன்னிக்கப்படுகின்றனர். பெண்கள் மட்டும் ஏன் ஒறுக்கப்பட வேண்டும். நெஞ்சு உரம் கொண்டவன்தான் என்றாலும், அவள் அவனோடு மஞ்சத்தில் மெழுகு வர்த்தியாகி விட்டாள். அவள் காலம் காலமாகக் கல்லாகிக் கிடந்தாள்.

அந்தக் கல் இராமன் வழியில் தட்டுப்பட்டது. இராமன் திருவடி பட்டதும் அவள் உயிர் பெற்று எழுந்தாள். கல்லையும் காரிகையாக்கும் கலை, அவன் காலுக்கு இருந்தது. அவள் சாப விமோசனம் பெற்றாள்.

ஆத்திரத்தில் முனிவர் மிகைப்பட நடந்து கொண்டார். அவரே அவளை மன்னித்து இருக்கலாம்; அத்தகைய மனநிலை அவருக்கு அப்பொழுது அமையவில்லை. இராமனைக் கண்டதும் அவர் மனம் மாறியது; விசுவாமித்திரர் வேறு அறிவுரை கூறினார். "பொறுப்பது கடன்" என்று எடுத்துக் கூறினார்; அவளை மறுபடியும் சேர்த்துக் கொள்ள வேண்டினார். கவுதமர் மறுபடியும் தம் தவ வாழ்க்கையில் ஈடுபடலாயினார். அகலிகையும் முனி பத்தினியாய் இருந்து அவருக்குப் பணிவிடை செய்தாள்; அவள் கூந்தல் மலர் மணம் பெற்றது; கல்லைப் பெண்ணாக்கிய காகுத்தன் பெருமையைப் பாராட்டினார்; விசுவா மித்திரர். "தாடகை அழிவு பெற்றாள்; அகலிகை வாழ்வு பெற்றாள்; அவன் கைவண்ணம் அங்கு புலப்பட்டது. கால்வண்ணம் இங்கே தெரிய வந்தது "என்று விசுவாமித்திரர் பாராட்டினார். "கைவண்ணம் அங்கு கண்டேன்; கால்வண்ணம் இங்கு கண்டேன்" என்பது அவர் சொல்.

### மிதிலையில் சானகி

கருகிய மொட்டு ஆகாமல் ஒரு பெண்ணுக்கு வாழ்வளித்த இராமன், மற்றோர் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் சூழ்நிலை அவனை எதிர்நோக்கி நின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்களால் சிறந்த மனிதர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட முடியுமா? மேகங்கள் பெரியவைதான் ஆனால் சூரியனை மறைத்துவிட முடியுமா?
– தாசவர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அருட்தந்தை சக்திவேல் அவர்களுக்கு ஓர் அன்பு மடல்

அருட்தந்தை சக்திவேல் அவர்களுக்கு அன்பு வணக்கம். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தாங்கள் ஆற்றி வரும் பணி மன ஆறுதலைத் தருகிறது.

தமிழர் விடயங்களில் தங்களின் காத்திரமான கருத்துக்களால் தங்கள் மீது தமிழ் மக்கள் மிகுந்த மரியாதை கொண்டுள்ளனர்.

தவிர, திருக்கேதீச்சர விவகாரத்தில் இந்து – கத்தோலிக்க மதத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு சுமுகமான தீர்வுக்கு வரவேண்டுமென தாங்கள் விடுத்த கோரிக்கை மிகவும் முக்கியமானது.

அதாவது திருக்கேதீச்சர விவகாரம் இப்படியே நீண்டு செல்லுமாயின், அதன் விளைவு தமிழ் இனத்தின் ஒற்றுமையை குலைப்பதாக அமையும்.

அதற்கும் மேலாக, கிரந்தம் முற்றிப் பௌந்திரம் ஆக்குவதுபோல மதவாத வன்மங்கள் மூலைக்கு மூலை தலைதூக்கவும் செய்யும்.

எனவே தமிழ் இனத்தின் மீது கருசனை கொண்டவர்கள் திருக்கேதீச்சர விவகாரத்தை சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டும் என நிச்சயம் விரும்புவர்.

அந்த அடிப்படையிலேயே திருக்கேதீச்சர விவகாரத்தை இந்து – கத்தோலிக்க மதத் தலைவர்கள் சுமுகமாகத் தீர்த்து வைத்து; மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டு மென்ற கோரிக்கையை தாங்கள் முன்வைத்துள்ளீர்கள் என நம்புகின்றோம்.

தங்களின் குறித்த கருத்துருவாக்கத்தின் அடிப்படையிலேயே இக்கடிதத்தை தங்களுக்கு அவசரமாக எழுதுகின்றோம்.

தமிழ் மக்களின் உரிமை விடயங்களிலும் தமிழ் அரசியல் கைதிகளின் நலன்களிலும் அதீத கருசனை கொண்டு செயற்படும் தாங்கள் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்டவர்.

எனவே திருக்கேதீச்சர விவகாரத்தில் நீங்களே தலையிட்டு ஓர் இணைப்பாளராகச் செயற்பட்டு இந்து – கத்தோலிக்க மதத் தலைவர்களைச் சந்திக்க வைத்து, ஒரு சுமுகமான தீர்வை ஏற்படுத்தினால் என்ன? என்பதுதான் நம் விண்ணப்பம்.

திருக்கேதீச்சர விடயத்தில் மதத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான தீர்வை எட்ட வேண்டும் என்பது ஒரு பொதுவான கருத்து மட்டுமே. அந்தக் கருத்து உரிய இலக்கை அடைய வேண்டுமாயின், அதனைச் செயலுருப்படுத்த தக்கார் தேவை.

ஆகவே தங்களின் கருத்து காலம் கருதிய அறிக்கையாக மட்டும் இருக்காமல், அது செயலுருப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

இந்தக் கோரிக்கையின் நோக்கமெல் லாம் எம் தமிழினம் மதத்தின் பேரால் ஒற்று மையை இழந்துவிடக்கூடாது என்பதுதான்.

### வாக்காளர் பதிவின் காரணமாகவே

# யாழ்.மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள் அதிகரித்துள்ளனர்

### அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் பதிவின் காரணமாகவே யாழ். மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதித்துவத்தை ஆறில் இருந்து ஏழாக அதிகரிக்க முடிந்தது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். மாவட்டத்தின் வாக்காளர் தினம் நேற்று செவ்வாய்க்கிழமை தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற நிலையில் அதில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆரம்பத்தில் யாழ். மாவட்ட மக்கள் பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை 11 ஆக காணப்பட்டது. அது பின்னர் பலதரப்பட்ட இடப்பெயர்வுகளின் காரணமாக ஆறாக குறைந்து தற்போது வாக்காளர் பதிவுகளின் காரணமாக ஏழாக அதிகரித்துள்ளது.

வாக்காளர் உரிமை அதன் முக்கியத்துவம் மற்றும் பெறுமதி ஆகிய விடயங்கள் தொடர்பாக சகல மக்களும் அறிந்து கொள்ளும் முகமாக வாக்காளர் தினத்தில் விழிப்புணர்வு நிகழ்வுகள் எம்மால் நடாத்தப்பட்டன. வாக்கு மிக வலிமையான ஆயுதம். அந்த ஆயுதத்தை மக்கள் சரியாகப் பயன்படுத்துவதென்பது அவரவர் அறிவுப் பரப்பைப் பொறுத்து அமைகிறது. வலிமையான அந்த வாக்குரிமை என்ற ஆயுதத்தை சரியாகப் பயன்படுத்துகிறோமா என்பதனை எண்ணிப் பாருங்கள்.

அதிஉயர் இறைமையான வாக்குரிமையை சகலரும் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு சரியாகப் பயன்படுத்தினால்தான் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியும் என்றார். (ம-30)

# வவுனியாவில் போதையில் அட்டகாசம் முதியவர் உட்பட இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவில் நேற்று மாலை மதுபோதையில் நுளைந்த மூவர் பூங்காவில் பணியாற்றிவரும் முதியவர் உட்பட இருவரை தாக்கி காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

முச்சக்கரவண்டி ஒன்றில் சிறுவர் பூங்காவிற்குள் நுளைந்த குறித்த குழுவினர் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த முதியவரை கண்மூடித்தனமாக தாக்கினர்.

இதனை அவதானித்த நபர் ஒருவர் அதனை தடுக்க முற்பட்டபோது அவரையும் தாக்கி காயப்படுத்தியதுடன் அவரது பெறுமதிமிக்க தொலைபேசியையும் உடைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அவசரமாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தபோதும் நீண்ட நேரமாகியும் சம்பவ இடத்திற்கு பொலிசார் சமுகமளிக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ம-299)

# கட்டட நிர்மாண பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேல்மாடி கட்டட வேலைக்காக வைக்கப்பட்டிருந்த பொருட்களே இரவோடிரவாக திருடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினரால் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-104)

# முல்லைத்தீவில் இடம்பெற்ற திருட்டுடன் தொடர்புடைய மூவர்


### யாழ்ப்பாணத்தில் கைது

முல்லைத்தீவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் யாழ்ப்பாணத்தில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் முல்லைத்தீவு நகர பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரவு நேரத்தில் 20 பவுண் நகை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரே நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 17 பவுண் நகையும் மீட்கப்பட்டுள்ளதாகவும் குறித்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்கள் ஏற்கனவே பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறு ப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். (ம-18,33,104)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

மற்றொரு வகையான தர்க்கம் இருக்கிறது. சில குறிப்பிட்ட உதாரணங்களையோ, நிகழ்ச்சிகளையோ பார்த்து அதிலிருந்து சாதாரண கருத்தை அறிதல். உதாரணமாக இந்த காக்கை கறுப்பு, அந்த காக்கையும் கறுப்பு, நாம் பார்க்கும் காக்கைகள் எல்லாம் கறுப்பாகவே இருக்கின்றன. அதனால் உலகில் உள்ள காக்கைகள் எல்லாம் கறுப்பு. இது மற்றொரு வகை.

ஆனால் இதில் தவறு ஏற்பட இடம் இருக்கிறது. ஏனென்றால் தேடிப்பார்த்தால் ஒரு வேளை எங்கோ ஒரு நாட்டில் வெள்ளைக் காக்கை இருக்கலாம்.

இன்னோர் உதாரணம்: எங்கு மழை பெய்ததோ அங்கு மேகம் இருந்தது. அல்லது இருக்கிறது. இங்கே மேகத்திலிருந்து மழை பெய்கிறது என்ற சாதாரண கருத்து உருவாகிறது.

இன்னும் ஓர் உதாரணம்: இவனுக்கு முப்பத்திரெண்டு பற்கள், அவனுக்கும் முப்பத்திரெண்டு பற்கள். எந்த மனிதனை பார்த்தாலும் அவனுக்கு முப்பத்திரெண்டு பற்கள். ஆகவே எல்லா மனிதர்களும் முப்பத்திரெண்டு பற்களைக் கொண்டவர்கள். இப்படிப்பட்ட தர்க்க முறைகள் ஆங்கில தர்க்க சாஸ்திரத்தில் உள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 03

எல்லை நிர்ணய ஆணையக் குழு அறிக்கை சபையால் நிராகரிக்கப்பட்டால், மாகாண சபைத் தேர்தலை பழைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்த முடியும் என்று கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் தினேஷ் குணவர்த்தன கூறினார்.

"மாகாண சபைத் தேர்தல் 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெறும் என்று அரசாங்கம் எங்களுக்கு உறுதியளித்துள்ளது. அவ்வாறு செய்ய நாங்கள் வலியுறுத்துகிறோம்" என்றும் அவர் கூறினார்.

அமைச்சர்கள் மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சியினர் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளை மீறுவதால் இந்த அறிக்கையை எதிர்ப்பதாகக் கூறினார்கள்.

அறிக்கை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட பின் சபாநாயகரால் நியமிக்கப்பட்ட பிரதமர் தலைமையிலான குழு இரண்டு மாதங்களுக்குள் எல்லை நிர்ணய ஆணைய அறிக்கை குறித்து பரிந்துரைகளை அளிக்கலாம். இதனால் ஜனாதிபதி அதை வர்த்தமானி செய்ய முடியும் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா கூறினார்.

இரண்டு மாதங்களில் புதிய கலப்பு முறையின் கீழ் தேர்தலை நடத்த முடியும். நாம் ஒரு முற்போக்கான அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டுமானால் விகிதாசார முறைமையை ஒழிக்க வேண்டும் என்று கூறிய அமைச்சர் மேலும் கூறுகையில், எல்லை நிர்ணய அறிக்கை ஒரு சுயாதீன ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டது. அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட ஒன்று அல்ல." என்றார்.

**அமைச்சர்கள் மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சியினர் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் இவ் அறிக்கையில் மீறப்படுவதால் இந்த அறிக்கையை எதிர்ப்பதாக பாராளுமன்றத்தில் கூறினார்கள்.**

**பாராளுமன்ற விவாதத்தின் போது தமிழ், முஸ்லிம் பாராளுமன்றஉறுப்பினர்கள்எல்லை நிர்ணய ஆணைக்குழு மீது வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழு பத்திரிகைகள் மூலம் பதில் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக சிவில்சமூகங்கள் இவ்அறிக்கையில் சிறுசிறு குறைபாடுகளைக் கண்டபோதும் மிகவும் சிறந்த அறிக்கை என்று பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்ததையும்குறிப்பிடலாம்.**

இவ் விவாதத்தின் போது தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லை நிர்ணய ஆணைக் குழு மீது வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எல்லை நிர்ணய ஆணைக் குழு பத்திரிகைகள் மூலம் பதில் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக சிவில் சமூகங்கள் இவ் அறிக்கையில் சிறுசிறு குறைபாடுகளைக் கண்டபோதும் மிகவும் சிறந்த அறிக்கை என்று பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்ததையும் குறிப்பிடலாம். இவைகள் பற்றிய பார்வையும் இக்கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2018 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயக் குழு அறிக்கை பற்றி....

எல்லை நிர்ணயக்குழு தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு அரசியல் கட்சிகள், பொது சன அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரிடமிருந்து கருத்துக்களையும் மற்றும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தலுக்கு பதில் அளிக்குமுகமாக வாய் மூலமும் எழுத்து மூலமும் 678 பதில்கள் கிடைக்கப் பெற்றன.

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அநேகமான பரிந்துரைகள் குழுவின் பணிப்பாணைக்கு உட்பட்டதாக இருந்ததால் அவை தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் போது கருத்தில் கொண்டும், மற்றைய பிரேரணைகள் அதாவது குழுவின் பணிப்பாணைக்குட்பட்டு இருக்காதவற்றை அகற்றியும் ஒன்பது மாகாண சபைக்குள் உள்ளடங்கும் 25 மாவட்டங்களுக்கும் தொகுதிவாரியாக 50 சதவீதமான மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 222 தொகுதிகள் உருவாக்கப் பட்டது. இச்செயன்முறையின் தகவல்களை ஒன்றுதிரட்டி மாகாணம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கொடுப்பதற்காக தயாரிக்கப் பட்டதே எல்லை நிர்ணயக் குழு அறிக்கையாகும்.

இவ்வறிக்கை இரண்டு தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன. முதலாம் தொகுதி 14 அத்தியாயங்களைக் கொண்ட 4 பகுதிகளாகப்பிரிக்கப்பட்டிருந்தது. பகுதி ஒன்று முதல் இரண்டு அத்தியாயங்களையும், பகுதி இரண்டு 3-11 அத்தியாயங்களையும், பகுதி மூன்று 12 ஆம் அத்தியாயத்தையும், பகுதி நான்கு அத்தியாயங்கள் 13-14 ஐயும் மற்றும் பின்னிணைப்புகளையும் கொண்டுள்ளது.

**25 மாவட்டங்களுக்கும்தொகுதிவாரியாக 50 சதவீதமான மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 222 தொகுதிகள் உருவாக்குவதே எல்லை நிர்ணயக் குழுவின் கடமையாக இருந்தது.**

இவ்வறிக்கையில் "அறிமுகம்" என்ற தலைப்பிலான முதலாவது அத்தியாயத்தில் குழுவின் நியமனம், எல்லை நிர்ணயம் தொடர்பாக செல்வாக்கு செலுத்தும் சட்டம், குழுவின் விடயப் பரப்பெல்லை, நடபடி முறை, தேர்தல் தொகுதிகளுக்கமைய நிர்வாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல் தொகுதிகளை வேறு பிரிப்பதோடு தொடர்புடைய அளவீட்டு முறைகள் மற்றும் பிரதிநிதித்துவம் முறை தொடர்பான விளக்கங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

**இவ்வறிக்கை இரண்டு தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன. முதலாம் தொகுதி 14 அத்தியாயங்களைக்கொண்ட 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தொகுதி II இல் ஒவ்வொரு மாவட்டத்தினுள்ளும் வரும் தேர்தல்தொகுதிகள் அடங்கிய 25 மாவட்டத்திற்குமான படங்கள் கொண்ட தொகுதி ஆகும்.**

"பொது மீளாய்வு" எனக்குறித்தொதுக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையின் இரண்டாம் அத்தியாயம், தேர்தல் பிரதிநிதித்துவமுறை, இலங்கையின் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை, இலங்கையின் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தல் என்ற தலைப்பின் கீழ் உரிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. "மாகாணங்கள்" என்ற நிர்வாக அலகு தாபிக்கப்பட்டதிலிருந்து அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கான முகவர்களை தேர்ந்தெடுத்தல் வரையிலான தகவல்கள் இதில் உள்ளக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் அத்தியாயம் முதல் ஒன்பதாம் அத்தியாயம் வரை எல்லை நிர்ணயம் தொடர்பான நடபடி முறை விளக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஒவ்வொரு மாகாணத்திற்குமென குறித்தொதுக்கப்பட்ட 9 அத்தியாயங்கள் காணப்படுகின்றன. அத்தியாயத்தின் ஆரம்பத்தில் மாகாணம் தொடர்பான பொதுத் தகவல்களைப் பற்றிய விபரமும் அதைத் தொடர்ந்து மாகாணத்திற்குள் அமையப்பெற்றுள்ள ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் விபரமொன்றும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேர்தல் தொகுதிக்கான எல்லை நிர்ணயம் சம்பந்தமாக பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் விபரமாக தரப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு மாவட்டமும் வேறு பிரித்துக்காட்டப்படுகின்ற தேர்தல் தொகுதிகளின் எல்லைகளும் அவை உள்ளடக்கியுள்ள பிரதேசங்களும் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் பன்னிரண்டில் 9 மாகாணங்களுக்குட்பட்ட 25 நிர்வாக மாவட்டங்களில் எல்லை நிர்ணயக் குழுவினால் எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட 222 மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளின் பட்டியல் தரப்பட்டுள்ளது.

பதின்மூன்றாம் அத்தியாயத்தில் மாகாண சபைத் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் தொடர்பாக குழுவினால் வலியுறுத்தப்படுகின்ற பெரும்பான்மை இனப்பிரிவினரிலும் வேறுபட்ட ஏதேனும் பிணைப்பொன்றுடன் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த சனத்தொகையினரின் ஒருங்கிணைப்பின்பால் கவனம் செலுத்துதல், 2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணிப்பீட்டோடு தொடர்புடைய சனத்தொகை தகவல்களைத் தேர்தல் தொகுதிகளாக பிரிக்கின்ற போது அடிப்படையாகக் கொள்ளுதல், கலப்பு பிரதிநிதித்துவ முறை தொடர்பான புரிந்துணர்வு குறைவாகக் காணப்படுகின்றமை, மாகாண சபைகளுக்கான பிரதிநிதிகளாக பெண்களைத் தேர்ந்தெடுத்தல், மாகாண சபைகளுக்கான மிகை ஆசனங்களுக்கான பிரதிநிதிகளைப் பெயர் குறித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் அலசி ஆராயப்பட்டுள்ளன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 பேர்...

கோவிட்-19 தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,055 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## +1,254...

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 639, 297ஆக அதிகரித்துள்ளது. (ம)

## யாழில் தனித்...

பகல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது-72) என்ற வயோதிபப் பெண்ணே அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதியில் உள்ள வீடொன்றில் அப்பெண் தனிமையில் இருந்தவேளை வீட்டு வேலைக்கு வந்த இளைஞனே பெண்ணைப்பூச்சாடியால்அடித்துக்கொலை செய்த பின்னர் அப்பெண் அணிந்திருந்த தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சம்வம்தொடர்பில்யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-18,33,104)

## வவுனியா...

கனகராயன்குளம் பகுதியில் பேருந்திற்காக காத்திருந்த தந்தையும் மகளும் அவ்வீதியால் வந்து கொண்டிருந்த பேருந்தை வழிமறித்து அதில் ஏறமுற்பட்டுள்ளனர்.

இதன்போது வவுனியாவில் இருந்து யாழ்.நோக்கி சென்றுகொண்டிருந்த பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து குறித்த இருவரையும் மோதியுள்ளது.

விபத்தில் பேருந்திற்காக காத்திருந்த சிவசுப்பிரமணியம் சிந்துயா (வயது-33) என்ற பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

அவரது தந்தை படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாரவூர்த்தி அதிக வேகமாக வந்த நிலையில் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-299)

## இன்றும் சுழற்சி...

மற்றும் C ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு 4 மணித்தியாலமும் 40 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

ஏனைய வலயங்களுக்குள் உள்ளடங்கும் பகுதிகளுக்கு 4 மணித்தியாலமும் 30 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படஉள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய நாளாந்தம் சுமார் 4,000 மெட்ரிக் டன் எரிபொருள் தேவைப்படுகிறது. நேற்று இரண்டாயிரம் மெட்ரிக் டன் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் 550 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் நிறுத்தப்பட்டன. இன்று எரிபொருள் தேவை 4,000 மெட்ரிக் டன் ஆகும். எனினும் 1,000 மெட்ரிக் டன் மட்டுமே கையிருப்பில் உள்ளது.

இதன்படி இன்றைய தினம் 3,000 மெட்ரிக் டன் எரிபொருளுக்கு பற்றாக்குறை ஏற்படும்.

அவ்வாறு பற்றாக்குறை ஏற்பட்டால் தேசிய மின் கட்டமைப்புக்கு 750 மெகாவொட் மின்சாரம் இல்லாது போகுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் மேலும் தெரிவித்தார். (ம)

## அரசுக்கு...

ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறை என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலமாக ஜெனிவா கூட்டத்தொடரை இலக்கு வைத்தே எதிர்க்கட்சி காய் நகர்த்துகின்றது என்பது புலனாவதாக அவர் கூறினார்.

கருத்து சுதந்திரம் மீதான அடக்குமுறை மற்றும் ஊடகவியலாளர்களின் மீதான அச்சுறுத்தல் குறித்து நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கமே யுத்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு நாட்டை காட்டிகொடுத்தது என குற்றம்சாட்டிய சரத் வீரசேகர, இனிமேலும் இவ்வாறான கருத்துக்களை முன்வைக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் ஊடகவியலாளர் சமுதிதவின் வீட்டின் மீதான தாக்குதல் இடம்பெற்றபோது, அங்கு வந்து தாக்குதலை நடத்தியவர்கள் வெள்ளைவானில் வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மன்னார் மனித...

ளார்.

மன்னார், சதொச மனித புதைகுழி விவகாரம் தொடர்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேலினால், வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மீளாய்வு மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, நீதிபதி குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம-250)

## எரிபொருள்...

திருத்தம் மேற்கொள்வது குறித்து எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

மின்சாரம், எரிபொருள் நெருக்கடி தொடர்பாக நேற்றைய தினம் அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ம)

## பிச்சையெடுக்கும்...

மெகா வோட் மின்சாரத்தை இன்று முதல் உற்பத்தி செய்ய முடியாமல் போகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

36 மில்லியன் டொலர் இல்லாத காரணத்தினால், நாட்டு மக்களின் போக்குவரத்து மாத்திரமல்லாது மின்சாரத்தை அரசாங்கம் இல்லாமல் ஆக்கியுள்ளது.

நாடு அடைந்துள்ள பிச்சைக்கார நிலைமை சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் ஆகிய ராஜபக்ஷ சகோதரர்கள் பொறுப்புக் கூற வேண்டும். மின்சார நெருக்கடி உட்பட பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கம் பாறையை பறித்த பூனையின் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (ம)

## பயங்...

செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் உயர் நீதிமன்றம் விசாரிக்கத் தொடங்கியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக் கான மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கிய ஜோதி சரவண முத்துவினால் பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்தும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என தெரிவித்து விசேட தீர்மான மனுவொன்றை தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், பயங்கரவாத தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். (ம)

## கசிப்புடன்...

காய்ச்சும் உபகரணங்கள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தெல்லிப்பழை பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 40 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் ஒரு இலட்சம் மில்லிலீற்றர் கோடா என்பவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-104)


தன நிதானய
திகதி - 2022.02.22
சீட்டிழுப்பு இலக்கம் - 716
D 23 63 67 74

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 22.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2981
D 10 40 49 74

மஹஜன சம்பத
திகதி 2022/02/22
சீட்டிழுப்பு இலக்கம் 4686
H 3 6 0 0 4 8

செவன
திகதி 22/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 358
L 44 65 72 76

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.22
சீட்டிழுப்பு இலக்கம் 0027
மேடம் 08 32 55 60 மேடம்

மெகா பவர்
திகதி 22/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1034
C 20 34 45 53 61

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1663 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 22.02.2022 தினம் செவ்வாய்
R 09 51 52 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,534,558/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.22
சீட்டிழுப்பு இல: 3824
ரூ.4,882,100/-
வெற்றி இலக்கங்கள்
27 36 52 54 A

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 138
சீட்டிழுப்பு திகதி 22.02.2022
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 23 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,491,880/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,373,072/-
திகதி 22.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3375
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 03 22 32 38
1381194
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,714,940/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 13 21 29 53 71
சீட்டிழுப்பு வாரம் 839
2022.02.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 215,377,891/-

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1489
சீட்டிழுப்பு திகதி: 2022.02.22
ரூ. 5,603,820/-
04 23 52 64 G


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10328)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (10325)

உடனடி வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் இந்திய சீன உணவகம்
ஒன்றிற்கு சமையலாளர், சமையல் உதவியாளர்,
சுத்திகரிப்பாளர் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு
021 222 4550|077 725 9605 (C-3823)

# சமூக ஊடகங்களை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக பிரசாரம்

## இராஜாங்க அமைச்சர் ஷெகான்



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் வேளையில், இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் கறுப்புப் புள்ளியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இன்றளவிலும் தொடர்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் ஷெகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"சமூக ஊடகங்களைப் பயன்படுத்திப் போலித் தகவல்களைச் சமூகமயப்படுத்தும் நடவடிக்கை இன்னும் நிறுத்தப்படவில்லை.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறும் காலப் பகுதியில், இலங்கையில் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் கறுப்புப் புள்ளியை ஏற்படு த்துவதற்குச் சில குழுக்கள் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம் மீண்டெழுவதை அந்தக் குழுக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதனால் சமூக வலைத்தளங்களில் கடத்தல்கள் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் பதிவிடப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கை தனிநபருக்கு இலாபமாக இருக்கலாம். ஆனால், இராஜதந்திர மட்டத்தில் அது நாட்டுக்குத் தாக்கமாகவே அமையும்.

எனவே, ஊடகங்களுக்கு ஒழுக்கக்கோவை இருப்பதுபோல் சமூக ஊடகங்களுக்கும் அவ்வாறான ஒழுக்கக்கோவை அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

வேலையாட்கள் தேவை

எமது புத்தக நிலையத்திற்கு பெண்
வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
காலை 6.30 மணிமுதல் மாலை
6.00 மணிவரை வேலை. உணவு
தரப்படும் (காலை, மதியம்). மேலதிக
விபரங்களுக்கு நேரில்
சமுகமளிக்கவும்.
அருள்நாயகி புத்தக நிலையம்
கொடிகாமம் (C-3815)

வேலையாள் தேவை

கோழிப் பண்ணையில் தங்கி
இருந்து வேலை செய்யக்கூடிய
ஆள் தேவை. (C-3824)

077 770 4771
உடுவில்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# நாடு முழுவதும் ஆயுதம் தாங்கிய படையினர்

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஆயுதம் தாங்கிய படையினரை நிறுத்துவதற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவு (அத்தியாயம் 40) மூலம் கோட்டாபய ராஜபக்ச, தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய இன்று(நேற்று) முதல் நடை முறைக்கு வரும் வகையில் நாடு முழுவதும் பொது அமைதியை பேணுமாறு ஆயுதம் தாங்கிய படையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், கண்டி, மாத்தளை, நுவரெலியா, கிளிநொச்சி, வவுனியா, குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய நிர்வாக மாவட்டங்களில் பொது அமைதியைப் பேணுவதற்காக இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினர் அழைக்கப்பட்டுள்ளனர். (ம)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3785)
0768226240 DHL

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை அன்னமணி

வயாவிளான் தெற்கு, திடற்புலத்தை பிறப்பிடாகவும் கற்பக விநாயகர் வீதி, உரும்பிராய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை அன்னமணி அவர்கள் நேற்று (22.02.2022) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னன் - செல்லக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலன் - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னத்துரையின் அன்பு மனைவியும் பிறேமதாஸ், காலஞ்சென்ற பிறேமதயாளன், பிறேமகரன், லலிதாம்பிகை, சர்மிளா, பிறேமகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுசீலா, சுபின்சியா, சுவேதா, சசிகரன், ஜென்சியா ஆகியோரின் அன்பு மாமியாரும் சுலக்சனா, யவிசனா, நிருசன், நிலானிகன், நிஜானிகன், நிதர்சன், நிதுசன், நிரூபன், நிதர்சன், ஜீனுசன், யானுசன், தேனுசன், வேணுசன், துசந்தீப், அதீதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.02.2022) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் தெற்கு, வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பகவிநாயகர் வீதி,
உரும்பிராய் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(10327)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 8 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக் குண்டு.

- 14 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

ஒரு பரப்பின் விலை - 3,50,000/= தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
தொடர்பு:- 077 814 7389, 077 117 8578 (10326)

பயிற்சியுடன் கூடிய தொழில் வாய்ப்பு

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வட மாகாணத்தில், புதிய முயற்சியாளர்களுக்கும் தொழில் வாய்ப்பினை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் எமது WEC நிறுவனத்தினூடாக அலுவலக ரீதியான தொழில் வாய்ப்பினை வழங்கவுள்ளனர்.

❖ முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு தகுந்த பயிற்சி வழங்கப்படும்.
❖ பயிற்சியின்போது 15,000/= - 25,000/= வரை சம்பளம் பெற்றுத் தரப்படும்.
❖ தங்குமிடம், உணவு வசதிகள் செய்து தரப்படும்.

பயிற்சியின் பின்
◆ 35,000/= - 75,000/= வரை சம்பள உயர்வு
◆ EPF, ETF செய்து தரப்படும்.
◆ முற்பணம், மேலதிக வருமானம் பெற்றுக்கொள்ள முடியும்.
◆ நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

குறிப்பு : இவ்வருடம் A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 298 6763, 076 888 9384 (10323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.